## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் தொடர்புடைய தகவலகளுடன் கூடிய நிதிக்கூற்றுக்ளுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து,நிதியத்தியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம்,நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் விடயப்பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன், அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும் என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி,உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும்,கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல். வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- நிதியத்தின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்,
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெகுமதி மற்றும் ஊக்குவிப்பு நிதியத்திற்கான 2011 இன் 04 ஆம் இலக்க கட்டளை கோவையின் இலக்கம் 3(2) பிரகாரம் ஒட்டு மொத்த உழைப்பிலிருந்து நிறுத்தி வைக்க வேண்டிய 5% இற்குரிய ரூபா 7,989,174 பெறுமதி நிதி செயலாற்றல் கூற்றில் செலவொன்றாக கழிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆண்டின் மிகை ரூபா 8,197,052 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் உழைப்பிலிருந்து நிறுத்தி வைக்க வேண்டிய 5% அளவை நிதி செயலாற்றல் கூற்றில் செம்மையாக்காது உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றின் ஊடாக திரண்ட நிதியத்தில் இருந்து கழித்து காட்ட குறித்துக் கொள்ளப்பட்டது | காலப் பகுதிக்குரிய மிகையிலிருந்து நிறுத்தி வைத்தலை, உரிமை மூலதனத்தில மாற்றங்கள் கூற்றில் செம்மையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டிறுதி மீதி ரூபா 24,450,864 ஆக வேண்டிய போதும், அது ரூபா 99,999 தொகை குறைத்து அறிக்கை இடப்பட்டிருந்தது | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் ஆண்டின் தேறிய காசு அதிகரிப்பு மற்றும் ஆண்டின் ஆரம்ப மீதியின் கூட்டுத் தொகை ரூபா 24,450,864 ஆன போதும் கூட்டல் தவறின் காரணமாக அது ரூபா 24,350,865 ஆகக் குறிக்கப்பட் டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க பொறுப்பேற்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | மூல ஆவங்கள் மூலம் மீதியை உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 2 ஆம் பந்தி மற்றும் பொது நிதி சுற்றறிக்கை 01/2020-1 பிரிவின் 15.1 பந்தியின் கீழ் அறிமுகம் செய்துள்ள நிதிப்பிரமாணம் 877(2)(இ) வழிகாட்டி 04 உப பந்தி 4.1 பிரகாரம், அட்டுறு கணக்கீட்டு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டிய போதும், கட்டுப்பாட்டு சபை படிகள், நிதி கட்டுப்பாட்டு படிகள் மற்றும் தொலைபேசி செலவுகளை செலவு வைத்தல் காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அட்டுறு அடிப்படையில் கணக்குளை தயாரிக்க குறித்துக் கொள்ளப்பட்டது. ஆண்டிற்குரிய அட்டுறு செலவுகள் ஜர்னல் குறிப்பு இட்டு சரிசெய்ய குறித்துக் கொள்ளப்பட்டது. | பொதுத் துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் செலவுகளை இனங்காண வேண்டும். |

## 1.6 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் பீ.ஈ.டி 3/2015 கொண்ட 2015 ஜுன் 17 திகதிய திறைசேரி சுற்றறிக்கை மூலம் இந்த நிதியத்தின் கட்டுப்பாட்டு சபைக்கு படிகள் செலுத்த மற்றும் நிதி கட்டுப்பாட்டு படிகள் செலுத்த சட்ட ரீதியான ஏற்பாடுகள் உள்ளடக்கப்படாத போதும், முறையான அங்கீகாரமின்றி நிதியத்தின் கட்டுப்பாட்டு சபைக்கு நடைமுறை ஆண்டினுள் கூட்டுத் தொகை ரூபா 354,000 ஆன படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | சட்ட ஏற்பாட்டின் கீழ் 1% ஆன நிர்வாக செலவு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் கட்டுப்பாட்டு சபை அங்கீகாரத்தின் கீழ் கட்டுப்பாட்டு சபை படிகள் மற்றும் நிதி கட்டுப்பாட்டு படிகள் செலுத்தப்பட்டுள்ளன. | திறைசேரி சுற்றறிக்கை மற்றும் சட்ட விதிகளிற்கு இங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| பொது நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 I ஆம் பிரிவின் 15.1 பந்தியின் கீழ் அறிமுகம் செய்துள்ள நிதிப்பிரமாணம் 877(2)(இ) | | | |
| i. வழிகாட்டியின் 04 உப பந்தி 01 | நியதிச்சட்ட நிதியமொன்றின் அனைத்து பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் மூல ஆவங்களை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான உபயோக பேரேட்டு புத்தகம் மற்றும் பேரேட்டு கணக்குகளில் | ஊக்குவிப்பு நிதியத்திற்காக பேரேட்டு கணக்குகளை பேணிச் செல்வதுடன் சுட்டிக் காட்டியுள்ள செலவுகள் நிர்வாக | சுற்றறிக்கை பிரகாரம் ஆண்டிற்குரிய கொடுக்கல் வாங்கல் மற்றும் தகவல்கள் குறித்த உபயோக |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பு இடவேண்டிய போதும், மீளாய்வாண்டில் வெகுமதி மற்றும் ஊக்குவிப்பு நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம், செலுத்த வேண்டிய ஊக்குவிப்பு, கட்டுப்பாட்டு சபை படிகள், நிதி கட்டுப்பாட்டு படிகள் மற்றும் தொலைபேசி செலவுகளிற்காக கூட்டுத் தொகை ரூபா 76,611,155 இற்கான ஜர்னல் குறிப்பு மற்றும் கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பேரேட்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | செலவுகளாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் அந்த செலவினங்களிற்கு வெவ்வேறாக ரோரேட்டு கணக்குகளை பேணிச்செல்ல குறித்துக் கொள்ளப்பட்டது. | பேரேட்டு புத்தகங்கள் மற்றும் பேரேட்டு கணக்குகளில் குறிப்பிட வேண்டும். |
| ii. வழிகாட்டியின் 04 உப பந்தி 02 | நிதிய பெறுவனவு மற்றும் கொடுப்பனவை கணக்கீடு செய்வதற்கு நிதிப்பிரமாணம் 445 பிரகாரம் பயன்படுத்தப்படும் காசேட்டில் குறிப்பு மற்றும் காசு மீதி சரியென நிதிப்பிரமாணம் 446(2) இன் ஏற்பாடு பிரகாரம் பொறுப்பான மேற்பார்வையாளர் அல்லது பதவிநிலை அலுவலரினால் கையொப்பமிட வேண்டிய போதும் காசேட்டில் பெறுவனவு மற்றும் காசு மீதி சரியென கையொப்பமிடப்பட்டு இருக்கவில்லை. | காசு பெறுவனவின் போதும் சரியென கையொப்பமிடுமாறு அறிவுரை வழங்கப்பட்டது. | நிதிப்பிரமாண ஏற்பாடுகள் பிரகாரம் காசேட்டில் குறிப்பு மற்றும் காசு மீதி சரியென கையொப்பமிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 12,180,506 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 16,397,208 தொகையாக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,216,702 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த குறைவிற்கு கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் செயற்பாட்டு செலவுகளின் ரூபா 25,428,061 ஆன அதிகரிப்பு பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 இன் 04 இலக்க மோட்டார் வாகன (வெகுமதி மற்றும் ஊக்குவிப்பு நிதியம்) கட்டளை கோவையின் 03(1) பிரகாரம் மோட்டார் வாகனம் தொடர்பாக சீர்கேடுகளை மேற்கொள்ளும் நபர்கள் | ஏதிர்காலத்தில் இது தொடர்பாக முறையான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க | நிதியத்தின் நோக்கத்தை அடைந்து கொள்ள முறையான வேலைத் திட்டமொன்றை தயாரிக்க |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரிற்கு தகவல் வழங்கும் மற்றும் போலியான செயற்பாடுகளை அடையாளம் காணும்/போலியான செயற்பாடுகளை வெளிப்படுத்திக் கொள்ளும் நபர்களிற்காக வெகுமதி மற்றும் ஊக்குவிப்பு நிதியத்திலிருந்து வெகுமதித் தொகை வழங்க ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ள போதும், மோட்டார் வாகனம் தொடர்பான சீர்கேடுகள், மோசடி அல்லது துஷ்பிரயோகம் தொடர்பான தகவல்கள் வழங்குவதற்கான முறைமைகளை ஸ்தாபிக்க, அது தொடர்பாக பொது மக்களை அறிவுருத்த மற்றும் வெகுமதி முறை தொடர்பாக தகவல்களை பொது மக்களிற்கு அறியப்படுத்த முறையான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்தியிருக்கவில்லை. | கட்டுப்பாட்டு சபையை அறிவுருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. | கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) | மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தின் 213 ஈ (2) பிரிவின் பிரகாரம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்படும் நீதிமன்ற வழக்கின் கீழ் அறவிடப்படும் தண்டப்பணத்தின் அரைவாசி மற்றும் மோட்டார் வண்டி போக்குவரத்து சட்டத்தின் 213(எ) பிரிவின் கீழ் அல்லது சுங்க பணிப்பாளர் நாயகத்தினால் அல்லது ஏனைய எழுத்துமூல சட்டமொன்றின் கீழ் செலுத்த விதிக்கப்படும் நிதி, வெகுமதி நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய போதும் மேற்குறித்த மூலங்கள் மூலம் எவ்வித வருமானமும் நிதியத்திற்கு கிடைத்திருக்காததுடன், அந்த மூலங்களிலிருந்து நிதியத்திற்கு நிதி அறவிடுவதற்கு நிதியத்தின் முகாமைத்துவத்தினால் எவ்வித வேலைத் திட்டத்தையும் தயாரித்திருக்கவில்லை. | குறித்த மூலங்கள் மூலம் நிதியத்திற்கு நிதியை அறவிடுவதற்கு பொருத்தமான வேலைத் திட்டமொன்றை தயாரிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தின் 213ஈ(2) பிரிவின் பிரகாரம் மோட்டார் வாகன போக்குவரத்து திைக்களத்தினால் தாக்கல் செய்யப்படும் நீதிமன்ற வழக்குகளின் கீழ் அறவிடப்படும் தண்டப்பணம், சுங்க தண்டப்பம் மற்றும் அறவிடுவது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள முறைமை ஒன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேீடும். |